# நமது தின கனி
காலை நாளிதழ்
NAMADHU DHINA KANI Daily Morning

Vol: 01 | Issue: 309 | 4 Pages | 11.6.2024 | Tuesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur

மலர்: 01 | இதழ்: 309 | 4 பக்கங்கள் | 11.6.2024 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர்


# "காலம் உள்ளவரை கலைஞர்" நவீன கண்காட்சி: முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் கண்டு ரசித்தார்

சென்னை, ஜூன் 11

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

முத்தமிழறிஞர் கலைஞர் கருணாநிதியின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு ஏற்பாட்டில் ராஜா அண்ணாமலை மன்றத்தில் மாபெரும் பிரம்மாண்ட மெய்நிகர் அரங்கம், கலைஞரை மீண்டும் நேரில் சந்திக்கும் ஆச்சர்ய அனுபவத்தை தூண்டும் வகையில் வரலாற்று சிறப்புமிக்க "காலம் உள்ளவரை கலைஞர்" நவீன கண்காட்சியகத்தை முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று பார்வையிட்டார்.

இப்பிரம்மாண்ட அரங்கத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் கருணாநிதியின் வாழ்க்கையில் நடந்த முக்கிய நிகழ்வுகளான "திருவாரூரில் ஆரம்பித்து சென்னை மெரினா கடற்கரை நினைவிடம் வரை" என நூற்றுக்கும் மேற்பட்ட அரிய வகை புகைப்படங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

இக்கண்காட்சி அரங்கிற்குள் உள்ளே நுழைந்ததும் முப்பரிமாண தொழில்நுட்பத்துடன் கூடிய 40 வயது தோற்றத்துடன்



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நேரடியாக மக்களுடன் தமிழை போற்றி பேசும் கவிதை காவியம் இடம்பெற்றுள்ளது.

"வாழும் வரலாறு முத்தமிழறிஞர் கலைஞரின் கதைப்பாடல்" காட்சிகள் இடம் பெற்றுள்ளன.

மற்றொரு அரங்கில் முத்தமிழறிஞர் கலைஞர் எப்போதும் அவர் விரும்பும் முரசொலி அலுவலகத்தில் உரையாடுவது போல் ஒரு 'செல்பி பாயிண்ட்' மெழுகு சிலை அமைக்கப்பட்டுள்ளது.

இங்கு எடுக்கப்படும் செல்பி புகைப்படங்கள் குறுஞ்செய்தியாக பார்வையாளர்களுக்கு உடனுக்குடன் அனுப்பி வைக்கப்படும்.

மேலும், ஒரு அரங்கில் மெய்நிகர் தொழில்நுட்பத்துடன் 3டி கேமராவில் பதிவு செய்த கலைஞரின் வரலாற்று காவியமும் கலைஞர் வழியில் தொடரும் திராவிட அரசை மக்கள் போற்றும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வரங்கம் திறக்கப்பட்ட நாள் முதல் அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தோழமை கட்சி தலைவர்கள், திரைப்படக் கலைஞர்கள், ஆதீனங்கள் மற்றும் தமிழ் ஆர்வலர்கள், பொதுமக்கள், மற்றும் மாணவர்கள் ஆகியோர் வருகை தந்து கலைஞருடைய வாழ்க்கை வராலாறு, அரசியல் பயணம் போன்ற முக்கிய சாதனைகள் அனைத்தையும் விளக்கும் குறும்படங்கள், பல்வேறு துறைகளில் அவர் புரிந்த சாதனைகளை குறித்து ஆர்வத்துடன் பார்வையிட்டு வருகின்றனர்.

"காலம் உள்ளவரை கலைஞர்" நவீன கண்காட்சியகத்தை இன்று பார்வையிட்ட முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின், இக்கண்காட்சியகத்தை ஏற்பாடு செய்த இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் சேகர்பாபு, குறும்படத் தயாரிப்புக்கு உதவிய கவிஞர் பா.விஜய், புகைப்படங்களை வடிவமைத்த அரசு ஆர்ட்ஸ் கோபி, மெய்நிகர் பரிமாண தொழில்நுட்பத்திற்கு உதவிய பாரதி மற்றும் கண்காட்சிக்கு உதவிய அனைவருக்கும் சால்வை அணிவித்து பாராட்டினார். இந்நிகழ்வின் போது நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆ. ராசா, பி. வில்சன், திரைப்பட இயக்குநர் கரு. பழனியப்பன், கவிஞர் பா.விஜய் ஆகியோர் உடனிருந்தனர். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# பொங்கலூர் பி.வி.கே.என். மேல்நிலைப்பள்ளியில் பயிலும் மாணாக்கர்களுக்கு ஆதார் பதிவு மற்றும் ஆதார் எண் புதுப்பித்தல் சிறப்பு முகாம்: அமைச்சர்கள் திறப்பு



திருப்பூர், ஜூன். 11

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அவர்கள் மற்றும் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் என். கயல்விழி செல்வராஜ் ஆகியோர் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் மற்றும் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் தலைமையில் திருப்பூர் மாவட்டம், பொங்கலூர் பி.வி.கே.என். மேல்நிலைப்பள்ளியில் பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளியில் பயிலும் மாணாக்கர்களுக்கு அந்தந்த பள்ளியிலே ஆதார் பதிவு மற்றும் ஆதார் எண் புதுப்பித்தல் சிறப்பு முகாமை துவக்கி வைத்தார்கள்.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழக மக்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக பள்ளிக் கல்வித்துறையின் சார்பில் பல்வேறு சிறப்பு திட்டங்களையும், முன்னெடுப்பு களை மாணவ, மாணவியார்களுக்கு பயன்பெறும் வகையில் செயல்படுத்தி வருகிறார்கள்.

அந்த வகையில், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் 23.02.2024 அன்று கோயம்புத்தூர் மாவட்டத்தில் மாணாக்கர்களுக்கு பயிலும் பள்ளியிலேயே ஆதார் பதிவு மற்றும் ஆதார் எண் புதுப்பித்தல் சிறப்பு முகாமை தொடங்கி வைக்கப்பட்டதனை தொடர்ந்து, இன்றைய தினம் மீண்டும் பள்ளிகள் திறக்கப்பட்ட முதல் நாளில் இந்த திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் பள்ளி வளாகத்தில் ஆதார் பதிவு மற்றும் ஆதார் கட்டாய பயோமெட்ரிக் புதுப்பிப்பை ELCOT மற்றும் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி ஆகியவற்றின் ஒருங்கிணைப்புடன் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. திருப்பூர் மாவட்டத்தில்இம்முகாம்இன்றுபொங்கலூர் பி.வி.கே.என். மேல்நிலைப்பள்ளியில் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

திருப்பூர் மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 27 ஆதார்பதிவு கருவிகளுக்கு, ஆதார் ஆபரேட்டர்கள் அதற்குரிய தேர்வு முறையில் தேர்ச்சி பெற்றுவர்களை ஆதார் ஆபரேட்டராக தேர்ந்தெடுக்கபபட்டனர். இவர்களில் தற்போது 21 ஆபரேட்டர்கள் திருப்பூர் மாவட்டத்தில் 14 ஒன்றியங்களில் உள்ள அரசு, அரசு உதவி பெறும் மற்றும் தனியார் பள்ளிகளில் ஆதார் புதிய பதிவு மற்றும் புதுப்பிப்பு பணியினை அவினாசி அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி,

தாராபுரம் அரசு மேல்நிலைப் பள்ளி, குடிமங்கலம் கொங்கல் நகரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி, மடத்துக்குளம் கொமரலிங்கம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி, மூலனூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, காங்கேயம் அரசு மேல்நிலைப்பள்ளி, குண்டடம் அரசு மேல்நிலைப் பள்ளி, பல்லடம் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, பொங்கலூர் பிவிகேஎண் மேல்நிலைப்பள்ளி, திருப்பூர் வடக்கு 15 வேலம்பாளையம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, பூலுவப்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி, திருப்பூர் தெற்கு ஜெய்வாபாய் மாதிரி பெண்கள் மேல்நிலைப்பள்ளி, அரண்மணைபுதூர் மாநகராட்சி நடுநிலைப்பள்ளி, விஜயாபுரம் அரசு மேல்நிலைப் பள்ளி, ஊத்துக்குளி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, உடுமலைப்பேட்டை அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, எஸ்கேபி மேல்நிலைப்பள்ளி, வெள்ளகோவில் முத்தூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி ஆகிய 18 பள்ளிகளில் இந்த முகாம் தொடங்கப்பட்டுள்ளது.

மேலும், நேரடி பயன் பரிமாற்றம் (DBT) முறையில் அரசால் வழங்கப்படும் அனைத்து சலுகைகள் மற்றும் உதவிகளைப் பெறுவதற்கு பள்ளி மாணவர்களுக்கு பயனுள்ளதாக இருக்கும் என்பதால், இந்தத் திட்டம் மிகவும் உன்னிப்பாக மதிப்பாய்வு செய்யப்பட்டு வருகிறது. ஆதார் பதிவு / ஆதார் கட்டாய பயோமெட்ரிக் புதுப்பிப்பு நோக்கத்திற்காக எந்த குழந்தையும் பள்ளியை விட்டு வெளியே செல்ல அனுமதிக்கப்பட மாட்டாது என்பதை உறுதிப்படுத்திட, 27 கருவிகளை கொண்டு அந்தந்த ஒன்றியங்களில் உள்ள பள்ளியில் மையம் துவங்கப்படுகிறது.

திருப்பூர் மாவட்டத்தில் மொத்தம் 1,862 பள்ளிகள் உள்ளன. இதில் 1,331 அரசு பள்ளிகள், 82 அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் 449 தனியார் பள்ளிகளாக செயல்படுகின்றன. 202324 கல்வியாண்டில் LKG முதல் 12 ஆம் வகுப்பு வரை மொத்தம் 4,35,890 மாணவ மாணவியர் பயின்று வந்தனர். இவர்களில்சுமார்25,000மாணவ/ மாணவியருக்கு ஆதார் எண் பெறப்படாமலும் 87,000 மாணவர்களுக்கு பயோமெட்ரிக் புதுப்பிப்பு செய்யப்படாமலும் உள்ளது. எனவே, திருப்பூர் மாவட்டத்தில் உள்ள 14 ஒன்றியங்களில் ஆதார் பதிவு மற்றும் ஆதார் எண் புதுப்பித்தல் சிறப்பு முகாம் துவங்கி வைக்கப்படுகிறது. இவ்வாறு மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் (பொ) திரு.பக்தவச்சலம், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், ஆசிரியர்கள் மற்றும் தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

## வான்கூவரில் இந்திரா காந்தி படுகொலை போஸ்டர்கள்: கனடா மந்திரி கண்டனம்



ஒட்டாவா, ஜூன் 11

கனடாவின் வான்கூவரில் முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியை அவரது பாதுகாவலர்கள் துப்பாக்கியால் சுட்டுக்கொன்றதை சித்தரிக்கும் போஸ்டர்கள் ஒட்டப்பட்டுள்ளன.

இதுதொடர்பாக, கனடா நாட்டின் பொது பாதுகாப்பு, ஜனநாயக அமைப்புகள் மற்றும் வெளிவிவகார மந்திரி டொமினிக் லெப்லாங் எக்ஸ் வலைதளத்தில் வெளியிட்டுள்ள செய்தியில், இந்த வாரம் வான்கூவரில் இந்திய பிரதமர் இந்திரா காந்தி படுகொலையை சித்தரிக்கும் போஸ்டர்கள் ஒட்டப்பட்டதாக செய்திகள் வந்துள்ளன. கனடாவில் வன்முறையை ஊக்குவிப்பதைஒருபோதும்ஏற்றுக்கொள்ளமுடியாதுஎனபதிவிட்டுள்ளார்.

இந்திய வம்சாவளி எம்.பி.யான சந்திரா ஆர்யா கூறுகையில், இந்த விவகாரம்தொடர்பாககனடாஅரசுஉடனடிநடவடிக்கைஎடுக்கவேண்டும் என வலியுறுத்தினார்.

மேலும், காலிஸ்தான் பிரிவினைவாத அமைப்பின் ஆதரவாளர்கள் வெளியிட்டுள்ள அந்த போஸ்டர்கள் கனடாவில் வாழும் இந்திய வம்சாவளியினருக்குஅச்சத்தைஉருவாக்கும்முயற்சியாகபார்க்கப்படுகிறது என தெரிவித்துள்ளார்.

## பிரதமராக மோடி பதவியேற்பு: பில் கேட்ஸ் வாழ்த்து



வாஷிங்டன், ஜூன் 11

பாராளுமன்ற தேர்தலில் பாஜக தலைமையிலான என்.டி.ஏ கூட்டணி 292 இடங்களைக் கைப்பற்றியது. கூட்டணிக் கட்சிகள் ஆதரவுடன் பா.ஜ.க. மீண்டும் வெற்றி பெற்று ஆட்சியை தக்க வைத்தது.

இதற்கிடையே, டெல்லி ராஷ்டிரபதி பவனில் நடைபெற்ற விழாவில் தொடர்ந்து 3வது முறையாக இந்தியாவின் பிரதமராக மோடி இன்று பதவியேற்றார். அவருக்கு ஜனாதிபதி திரவுபதி முர்மு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

இந்நிலையில், மைக்ரோசாப்ட் இணைநிறுவனரானபில்கேட்ஸ்பிரதமர் மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, பில் கேட்ஸ் எக்ஸ் வலைதளத்தில் வெளியிட்டுள்ள செய்தியில், 3வது முறையாக பிரதமராக பதவியேற்ற நரேந்திர மோடிக்கு வாழ்த்துகள். சுகாதாரம், விவசாயம், பெண்கள்தலைமையிலானமேம்பாடு மற்றும் டிஜிட்டல் மாற்றம் போன்ற துறைகளில் உலகளாவிய முன்னேற்றத்திற்கான புதுமைக்கான ஆதாரமாக இந்தியாவின் நிலையை நீங்கள் பலப்படுத்தி உள்ளீர்கள். இந்தியா மற்றும் உலகெங்கிலும் உள்ள மக்களின் வாழ்க்கையை மேம்படுத்த ஒரு தொடர்ச்சியான கூட்டாண்மையை எதிர்நோக்குகிறோம் என பதிவிட்டுள்ளார்.

## பிரதமராக பதவியேற்ற மோடி.. கொண்டாட்டத்தில் பற்றி எறிந்த பாஜக அலுவலகம்



குஜராத், ஜூன் 11

மக்களவைத் தேர்தலில் பாஜக தலைமையிலான என்.டி.ஏ கூட்டணி 292 இடங்களைக் கைப்பற்றிய நிலையில் கூட்டணிக் கட்சிகள் ஆதரவுடன் பாஜக ஆட்சியை தக்கவைத்துள்ளது. என்.டி.ஏ புதிய எம்.பி.க்கள் கூட்டத்தில் அக்கூட்டணியின் பாராளுமன்ற தலைவராக மோடி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இதனை தொடர்ந்து பிரதமராக மோடி 3வது முறையாகப் பதவியேற்றுள்ளார். குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு மோடிக்குப் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். அவருடன் 72 அமைச்சர்களும் பதவியேற்றுக் கொண்டனர். ராஜ்நாத் சிங், ஜே.பி நட்டா, அமித் ஷா, நிர்மலா சீதாராமன், நிதின் கட்கரி உள்ளிட்டோர் மீண்டும் அமைச்சரவையில் இடம்பெற்றுள்ளனர்.

இந்நிலையில் மோடி மீண்டும் பிரதமரான குஷியில் நாடு முழுவதும் பாஜகவினர் வெற்றிகொண்டாட்டத்தில் ஆரவாரித்து வருகின்றனர். அந்த வகையில் மத்தியப் பிரதேச மாநிலம் இந்தூரில் பாஜக கட்சி அலுவலகத்தில் பட்டாசு வெடித்து கொண்டாட்டத்தில் ஈடுபட்டிருந்தபோது அலுவலகத்தின் மேல் தலத்தில் தீப்பற்றி மற்ற பகுதிகளுக்கும் மளமளவெனப் பரவியது. சம்பவ இடத்துக்கு உடனே விரைந்த தீயணைப்புத் துறை போராடி தீயைக் கட்டுக்குள் கொண்டுவந்தது.

# திம்பம் மலைப்பாதை தடுப்புச்சுவரில் நடந்து சென்ற சிறுத்தைப்புலி



ஈரோடு, ஜூன் 11

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்தில் மொத்தம் 10 வனச்சரகங்கள் உள்ளன. இங்கு புலிகள், யானைகள், மான்கள், கரடிகள், காட்டெருமைகள், சிறுத்தைப்புலிகள் உள்ளிட்ட பல்வேறு விலங்குகள் உள்ளன. இந்த வனப்பகுதி வழியாக சத்தியமங்கலம்மைசூரு தேசிய நெடுஞ்சாலை செல்கிறது. மேலும் பண்ணாரி மாரியம்மன் கோவில் அருகே அடர்ந்த வனப்பகுதியில் இருந்து 27 கொண்டை ஊசி வளைவுகளுடன் கூடிய திம்பம் மலைப்பாதை தொடங்கு கிறது. இந்த மலைப்பாதையில் அவ்வப்போது இரவு நேரங்களில் சிறுத்தைப்புலி நடமாடி வருகிறது. இந்தநிலையில் நேற்று இரவு 19வது கொண்டை ஊசி வளைவு அருகே சாலையோர தடுப்புச்சுவரில் ஒரு சிறுத்தைப்புலி நடந்து சென்றது. அந்த வழியாக சென்ற வாகன ஓட்டிகள் இதை பார்த்து பீதியடைந்தனர். மேலும் தங்களுடைய வாகனங்களை சற்று தூரத்திலேயே நிறுத்திக்கொண்டனர். இதற்கிடையே வாகன ஓட்டி ஒருவர் தன்னுடைய செல்போனில் சிறுத்தைப் புலியை புகைப்படம் மற்றும் வீடியோ எடுத்தார்.

சிறிது நேரம் தடுப்புச்சுவரில் அங்கும் இங்கும் நடமாடிய சிறுத்தைப்புலி மீண்டும் அடர்ந்த வனப்பகுதிக்குள் சென்று மறைந்தது. அதன்பின்னரே வாகன ஓட்டிகள் அங்கிருந்து சென்றனர். சிறுத்தைப்புலி நடமாட்டம் குறித்த வீடியோ சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.

# அரசு மருத்துவமனையை அடித்து நொறுக்கிய ரவுடி கும்பல்



சென்னை, ஜூன் 11

சென்னை போதை மாத்திரைகளை விற்பனை செய்த வழக்கில் 3 பேரை போலீசார் கைதுசெய்தனர். கைதுசெய்யப்பட்ட சைக்கோசரண், போண்டா ராஜேஷ், தினேஷ் ஆகிய 3 ரவுடிகளையும் பரிசோதனைக்காக ராயப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு போலீசார் அழைத்துச் சென்றனர்.

அப்போது மருத்துவமனைக்கு வந்த ரவுடிகளின் ஆதரவாளர்கள், மருத்துவமனையை அடித்துநொறுக்கினர். இதில் மருத்துவ உபகரணங்கள், கண்ணாடிகள் ஆகியவை சேதமடைந்துள்ளது. இதனால் மருத்துவமனை வளாகம் முழுவதும் பரபரப்புடன் காணபட்டது.

சிறிது நேரத்தில் ரவுடிகள் அங்கிருந்து தப்பிச் சென்றனர்.

கஞ்சா, கொலை வழக்குகளில் தொடர்புடையவர்களை கைது செய்ததற்கு எதிர்ப்பு தெரிவித்து ரவுடிகள் மருத்துவமனையை அடித்து நெருக்கியது தெரிய வந்துள்ளது. ரவுடிகளை விடுவிக்கக் கோரி தாக்குதல் நடத்திய கும்பலை போலீசார் வலை வீசி தேடி வருகின்றனர்.

# ஓடும் பஸ்சில் இருந்து குதித்து வாலிபர் தற்கொலை... காதலியுடன் தகராறா?

பெரம்பலூர், ஜூன் 11

பெரம்பலூரில் இருந்து பயணிகளை ஏற்றிக் கொண்டு திருச்சி மாவட்டம், துறையூர் நோக்கி அரசு பஸ் ஒன்று நேற்று முன்தினம் இரவு சென்று கொண்டிருந்தது.

பெரம்பலூர்துறையூர் சாலையில் அடைக்கம்பட்டி அருகே சென்று கொண்டிருந்த போது பஸ்சில் செல்போனில் ஆத்திரத்துடன் பேசிக்கொண்டிருந்த வாலிபர் ஒருவர் திடீரென்று நான் பஸ்சில் இருந்து கீழே குதித்து சாகப்போகிறேன் என்று சத்தமாக கூறியபடி படிக்கட்டுக்கு வந்து வெளியே குதித்தார்.

இதனைக்கண்டு அதிர்ச்சியடைந்த சக பயணிகள் பஸ்சை நிறுத்துமாறு கூச்சலிட்டனர்.

இதையடுத்து டிரைவர் பஸ்சை உடனடியாக நிறுத்தினார். பஸ்சில் இருந்து இறங்கிய பயணிகள் அந்த வாலிபரை மீட்க ஓடினர்.

ஆனால்கீழேகுதித்ததில் தலையில் பலத்த காயம் அடைந்த அந்த வாலிபர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார்.

இதுகுறித்து தகவலறிந்து சம்பவ இடத்திற்கு வந்த பாடாலூர் போலீசார் அந்த வாலிபரின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

மேலும், இறந்தவர் யார்?, அவா் எந்த ஊரை சேர்ந்தவர் என்பது குறித்து போலீசார் விசாரித்தனர்.

இதில், அவர் திருச்சி மாவட்டம், துறையூர் தெற்கு தெருவை சேர்ந்த பாலகிருஷ்ணனின் மகன் வினோத் (வயது 21) என்பதும், அவர் அங்குள்ள பூக்கடை ஒன்றில் பூ கட்டும் வேலை செய்து வந்ததும் தெரியவந்தது.

வினோத் பெரம்பலூருக்கு வந்து விட்டு இரவில் சொந்த ஊருக்கு செல்வதற்காக அரசு பஸ்சில் ஏறி பயணம் செய்த போது இந்த சம்பவம் அரங்கேறியதாக போலீசார் தெரிவித்தனர்.

மேலும் வினோத், பெரம்பலூரில் தனியார் கல்லூரியில் படிக்கும் மாணவி ஒருவரை காதலித்து வந்ததாக கூறப்படுகிறது. அந்த பெண்ணுடன் ஏற்பட்ட தகராறு காரணமாக ஓடும் பஸ்சில் இருந்து கீழே குதித்து வினோத் தற்கொலை செய்து கொண்டாரா? அல்லது வேறு ஏதேனும் பிரச்சினையா? என்பது உள்ளிட்ட பல்வேறு கோணங்களில் போலீசார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

ஓடும் பஸ்சில் இருந்து வாலிபர் கீழே குதித்து தற்கொலை செய்து கொண்ட சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

# விவாகரத்து கேட்டு கணவர் கோர்ட்டில் வழக்கு... விருப்பம் இல்லாத மனைவி... அடுத்து நடந்த சோகம்

சென்னை, ஜூன் 11

சென்னை தாம்பரம் அடுத்த செம்பாக்கம் பகுதியை சேர்ந்தவர் ஷோபா (வயது 30). கம்ப்யூட்டர் என்ஜினீயரான இவருக்கும், நன்மங்கலத்தை சேர்ந்த கம்ப்யூட்டர் என்ஜினீயர் கார்த்திக் (33) என்பவருக்கும் திருமணம் நடந்தது. இவர்களுக்கு 3 வயதில் மகன் இருக்கிறான்.

கணவன், மனைவி இடையே ஏற்பட்ட கருத்துவேறுபாடு காரணமாக கடந்த 3 ஆண்டுகளாக பிரிந்து வாழ்கின்றனர். கார்த்திக் விவாகரத்து கேட்டு கோர்ட்டில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

இதில் ஷோபாவுக்கு விருப்பம் இல்லை என கூறப்படுகிறது. கடந்த 2 நாட்களுக்கு முன்பு நன்மங்கலத்தில் உள்ள கார்த்திக் வீட்டுக்கு சென்ற ஷோபா இதுபற்றி அவரிடம் பேச்சுவார்த்தை நடத்தினார். அதற்கு கார்த்திக், கோர்ட்டு வழியாக தீர்வு காணலாம் என கூறியதாக தெரிகிறது.

இந்தநிலையில் நேற்றும் கார்த்திக் வீட்டுக்கு சென்று இதுபற்றி ஷோபா பேசினார். ஆனால் அதில் எந்தவித தீர்வும் கிடைக்கவில்லை என தெரிகிறது. இதில் மனமுடைந்த ஷோபா, வேளச்சேரி விஜயநகர் இரண்டு அடுக்கு புதிய மேம்பாலத்தில் தனது ஸ்கூட்டரில் சென்று கொண்டிருந்தார்.

பாலத்தின் மைய பகுதிக்கு சென்றதும், திடீரென ஸ்கூட்டரை ஓரமாக நிறுத்திவிட்டு கீழே இறங்கினார். பின்னர் ஹெல்மட் மற்றும் செருப்பை கழற்றி வைத்துவிட்டு, சுமார் 40 அடி உயர மேம்பாலத்தில் இருந்து கீழே குதித்து விட்டார். கீழே உள்ள சாலையில் ரத்த காயங்களுடன் உயிருக்கு போராடிய அவரை அங்குள்ள தனியார் ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். ஆனால் அங்கு சிகிச்சை பலனின்றி ஷோபா பரிதாபமாக உயிரிழந்தார்.

இதுபற்றி வேளச்சேரி போலீசார் வழக்குப்பதிவு செய்து ஷோபா தற்கொலைக்கு வேறு ஏதாவது காரணமா? உள்ளதா என பல்வேறு கோணங்களில் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# காதல் திருமணம்: மனைவியை கொன்று ஏரியில் புதைத்த கணவர்... அடுத்து நடந்த விபரீதம்



கடலூர், ஜூன் 11

கடலூர் மாவட்டம், வேப்பூர் அடுத்த லட்சுமணபுரம் மாரியம்மன் கோவில் தெருவை சேர்ந்தவர் ராமச்சந்திரன் மகன் சக்திவேல்(33). பொக்லைன் எந்திர ஆபரேட்டரான இவர் கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு சுவேதா(20) என்பவரை காதலித்து திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்குகுழந்தைஇல்லை.

இந்த நிலையில் கணவன், மனைவி இருவரும் கள்ளக்குறிச்சி மாவட்டம் சின்னசேலம் அடுத்த நயினார்பாளையம் அருகே வாடகை வீட்டில் குடியேறினர். சக்திவேல், அந்த பகுதியில் உள்ள ஏரிகளில் பொக்லைன் எந்திரம் மூலம் மண் அள்ளும் வேலை செய்து வந்தார்.

வி.அலம்பலம் கிராம ஏரியில் மண் அள்ளும் பணியில் கணவன், மனைவி இருவரும் ஈடுபட்டனர். அப்போது கணவன், மனைவிக்கிடையே திடீரென தகராறு ஏற்பட்டதாக தெரிகிறது. இதில் ஆத்திரம் அடைந்த சக்திவேல், சுவேதாவை தாக்கியதில் அவர் மயங்கி விழுந்து உயிரிழந்தார். இதனால் செய்வதறியாமல் தவித்த அவர் அதே இடத்தில் பொக்லைன் எந்திரம் மூலம் பள்ளம் தோண்டி அதில் மனைவியின் உடலை போட்டு புதைத்தார்.

பின்னர் நடந்த சம்பவத்தை தனது செல்போனில் ஆடியோவாக பதிவு செய்து அதை உறவினர்களுக்கு வாட்ஸ்அப் மூலம் அனுப்பினார். பின்னர் சக்திவேல் அருகில் இருந்த மரத்தில் தூக்குப்போட்டு தற்கொலை செய்துகொண்டார். இதைப் பார்த்து அதிர்ச்சி அடைந்த அப்பகுதி மக்கள் போலீசுக்கு தகவல் கொடுத்தனர்.

அதன் பேரில் கள்ளக்குறிச்சி துணை போலீஸ் சூப்பிரண்டு தேவராஜ் தலைமையில் கீழ்குப்பம் போலீசார் மற்றும் சின்ன சேலம் தாசில்தார் கமலக்கண்ணன் ஆகியோர் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்தனர். அதேபோல் சக்திவேல் அனுப்பிய வாட்ஸ்அப் பதிவை பார்த்து அதிர்ச்சி அடைந்த உறவினர்களும் அங்கு வந்தனர். பின்னர் தாசில்தார் முன்னிலையில் சுவேதாவின் உடல் தோண்டி எடுக்கப்பட்டது. தம்பதியின் உடலை பார்த்து அவரது உறவினர்கள் கதறி அழுதனர்.

தொடர்ந்து கணவன், மனைவி இருவரின் உடலையும் பிரேத பரிசோதனைக்காக கள்ளக்குறிச்சி அரசு மருத்துவக்கல்லூரி ஆஸ்பத்திரிக்கு போலீசார் அனுப்பி வைத்தனர். சுவேதாவை கொன்று உடலை புதைத்து விட்டு சக்திவேல் தற்கொலை செய்து கொண்டதற்கான காரணம் என்னவென்று தெரியவில்லை? இது குறித்து போலீசார் வழக்குப்பதிந்து விசாரணை நடத்தி வருகிறார்கள். இந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# சுடுகாட்டு பாதை வேண்டி அருந்ததியர் மக்கள் சாலை மறியல்



செஞ்சி ஜூன் 11

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி அடுத்த கம்மந்தூர் ஊராட்சிக்கு உட்பட்டது பாண்டியன்குளம் கிராமம். இக்கிராமத்தில் நூற்றுக்கு மேற்ப்பட்ட அருந்ததியர் குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இப்பகுதி மக்கள் கடந்த நூறு ஆண்டுகளுக்கு மேலாக இறந்தவரின் உடலை தனியார் நிலத்தின் வழியாக சுடுகாட்டிற்கு கொண்டு செல்வது வழக்கம். இதனிடையே கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பு இக்கிராமத்தில் இறந்தவரின் உடலை வழக்கமாக கொண்டு செல்லும் பாதையின் வழியே கொண்டு செல்ல அந்த நிலத்தின் உரிமையாளர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக இப்பகுதி மக்கள் வருவாய்த்துறைக்கும், முதலமைச்சரின் தனிப்பிரிவுக்கும் மனு அளித்துள்ளனர். ஆனால் இந்த மனுவின் மீது அதிகாரிகள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என கூறப்படுகிறது. இந்நிலையில் அதே கிராமத்தை சேர்ந்த யாக்கோபு(90) என்ற முதியவர் உடல் நலக்குறைவால் உயிர் இழந்தார். அவரது உடலை சுடுகாட்டிற்கு கொண்டு செல்ல அந்த நிலத்தின் உரிமையாளர்கள் எதிர்ப்பு தெரிவித்ததாக கூறப்படுகிறது. இதனால் அதிர்ச்சி அடைந்த அப்பகுதி மக்கள் இது குறித்து வருவாய்த்துறைக்கு தகவல் தெரிவித்த நிலையிலும் வருவாய்த்துறை சேர்ந்த யாரும் அங்கு வராததால் ஆத்திரமடைந்த அப்பகுதி மக்கள் சாலையில் அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். இது குறித்து தகவல் அறிந்து வந்த செஞ்சி காவல் ஆய்வாளர் பார்த்தசாரதி தலைமையிலான காவல்துறையினர் அப்பகுதியில் சமாதான பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட நிலையில் இறந்தவரின் சடலத்தை வழக்கமாக கொண்டு செல்லும் வழியிலேயே சுடுகாட்டிற்கு கொண்டு சென்று அடக்கம் செய்யப்பட்டது. இச்சம்பவத்தால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு நிலவியது.

# தாராபுரம் மக்கள் நீதிமன்றத்தில் 174 வழக்குகளுக்கு 12 1/2 கோடி ரூபாய் இழப்பீடு



தாராபுரம், ஜூன் 11

தாராபுரத்தில் நடைபெற்ற மக்கள் நீதிமன்றத்தின் மூலம் 174 வழக்குகளுக்கு தீர்வு காணப்பட்டு 12 1/2 கோடி ரூபாய் இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டது.

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் வட்ட சட்டப் பணிக்குழு சார்பில் தாராபுரத்தில் உள்ள ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் தேசிய மக்கள் நீதிமன்றம் நடைபெற்றது. தாராபுரம் வட்ட சட்ட பணிக்குழு தலைவரும் சார்பு நீதிபதியுமான சக்திவேல் தலைமையில் நடைபெற்ற இந்த மக்கள் நீதிமன்றத்தில் தாராபுரம் கூடுதல் மாவட்ட நீதிபதி ஜான் மினோ, ஓய்வு பெற்ற நீதிபதி நாகராஜன், உரிமையியல் நீதிபதி மதிவதனிவணங்காமுடி, குற்றவியல் நடுவர் மன்றநீதிபதி உமா மகேஸ்வரி ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் மோட்டார் வாகன விபத்து வழக்குகள் 20, உரிமையியல் வழக்குகள் 45, குற்றவியல் சிறு வழக்குகள் 106, வங்கிக் கடன் வழக்குகள் 3 எனமொத்தம் 174 வழக்குகளுக்கு தீர்வு காணப்பட்டு 12,48,97,222 ரூபாய் இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டது. 480 பயனாளிகள் பயன்பெற்ற இந்தமக்கள் நீதிமன்றத்தில் வழக்கறிஞர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# ஈரோடு மாவட்டத்தில் பயிலும் பள்ளியிலேயே ஆதார் பதிவு மற்றும் வங்கி கணக்கு தொடங்குதல் சிறப்பு முகாம்: மாவட்ட கலெக்டர் துவக்கி வைத்து பார்வையிட்டார்

ஈரோடு, ஜூன் 11

ஈரோடு அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளியில் பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் பயிலும் பள்ளியிலேயே ஆதார் பதிவு மற்றும் வங்கி கணக்கு தொடங்குதல் சிறப்பு முகாமினை மாவட்ட கலெக்டர் ராஜகோபால் சுன்கரா துவக்கிவைத்து, மாணவ, மாணவியர்களுக்கு பாடப்புத்தகங்களை வழங்கினார்.

பள்ளிக்கல்வித்துறையின் சார்பில், பயிலும் பள்ளியிலேயே ஆதார் பதிவு மேற்கொள்ளும் பணிக்காக நிலையான வழிகாட்டு நெறிமுறைகள் வகுக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

இப்பணியினை மேற்கொள்வதற்காக ஈரோடு மாவட்டத்தில் 19 ஆதார் கருவிகளைக் கொண்டு புதிய ஆதார் பதிவு மற்றும் புதுப்பித்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ள ஏதுவாக தரவு உள்ளீட்டாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மேலும், தரவு உள்ளீட்டாளர்கள் அனைவருக்கும் முறையான பயிற்சி வழங்கப்பட்டு பள்ளிகள் திறக்கப்பட்டுள்ள முதல் பள்ளிகளில் ஆதார் பதிவு மாற்றம், புதுப்பித்தல் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஈரோடு மாவட்டத்தில் உள்ள 14 ஊராட்சி ஒன்றியங்களிலும் இம்முகாம் நடைபெறுகிறது.

அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும், தனியார் பள்ளிகளிலும் பயிலும் மாணவர்களுக்கு புதிய பதிவுகள், ஆதார் எண் புதுப்பித்தல் பணிகளை மேற்கொள்ளலாம். ஆதார் புதுப்பித்தல் மேற்கொள்ளும்போது, தனியார் மற்றும் சுயநிதிப்பள்ளிகளில் பயிலும் 6 மற்றும் 7 வயதுள்ள குழந்தைகளுக்கும், 16 மற்றும் 17 வயதுடைய குழந்தைகளுக்கும் இலவசமாக இச்சேவை வழங்கப்படுகிறது. மேலும், 8 முதல் 15 வயதுடைய குழந்தைகளுக்கு புதுப்பித்தல் மேற்கொள்வதற்கு இந்திய தனித்துவ அடையாள ஆணையம் நிர்ணயித்துள்ள கட்டணத்தை செலுத்தி இச்சேவையைப் பெற்றுக் கொள்ளலாம். அனைத்து அரசு, அரசு உதவிபெறும் மற்றும் தனியார் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் அப்பள்ளியிலேயே வங்கிக் கணக்கு தொடங்குதல் பணியும் இன்றைய தினம் மேற்கொள்ளப்படுகிறது. அதனைத் தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஈரோடு அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளியில் 6 முதல் 12ம் வகுப்பு பயிலும் மாணவியர்களுக்கு ஈபாண்டிற்கான பாடப்புத்தகங்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், ஈரோடு மாநகராட்சி மேயர் சு.நாகரத்தினம், முதன்மை கல்வி அலுவலர் சம்பத், உதவி திட்ட அலுவலர் ரவிச்சந்திரன் (ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வித்துறை) உட்பட தொடர்புடைய துறை அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# பள்ளி மாணவ, மாணவியர்களுக்கான ஆதார் சிறப்பு முகாம்: கலெக்டர் தொடங்கி வைத்தார்



கடலூர், ஜூன் 11

கடலூர், திருப்பாதிரிப்புலியூர் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் மாணவியர்களுக்கான ஆதார் பதிவு சிறப்பு முகாமினை மாவட்ட கலெக்டர் அ.அருண் தம்புராஜ் தொடங்கிவைத்து, பள்ளி மாணவர்களுக்கு இவ்வாண்டிற்கான விலையில்லா பாடப்புத்தகங்களை வழங்கினார்.

பள்ளிக்கல்வித் துறையில் மாணவ மாணவியர்களின் நலனுக்காக பல்வேறு புதுமையான செயல்பாடுகளை திட்டங்களை வகுத்து முனைப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு உதவி பெறும் மற்றும் தனியார் பள்ளிகளில் பயிலும் மாணவ/மாணவியர்கள் அனைவருக்கும் ஆதார் அட்டையை வழங்கிடுவது அவசியமாகும். குறிப்பாக 1ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து நிலை மாணவர்களுக்கும் இடைநிற்றல் இன்றி தொடர்ந்து கல்வி பயில ஏதுவாக உதவித்தொகைகள் மற்றும் ஊக்க தொகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்உதவித்தொகை மற்றும் ஊக்கத்தொகை அனைத்தும் மாணவ/மாணவியர்களுக்கு குறித்த நேரத்தில் முறையாக சென்று சேருவதை உறுதி செய்யும் விதமாக நேரடி பயனாளர் பரிமாற்றம் மூலம் பயனாளர்களின் வங்கி கணக்கிற்கு நேரடியாக செலுத்தப்படும் முறை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இதில் முதல் கட்டமாக கடலூர் மாவட்டத்தில் உள்ள 14 ஒன்றியங்களில் பள்ளியிலேயே ஆதார் பதிவு" என்ற சிறப்பு முகாம் தொடங்கப்படுகிறது. இம்முகாமில் 9 ஆம் முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களின் ஆதார் எண்ணை புதுப்பித்தல் மற்றும் இதுவரையில் ஆதார் எண் எடுக்காத மாணவர்களுக்கு எடுத்தல் போன்ற செயல்பாடுகள் நடைபெற உள்ளது. இதற்காக இல்லம் தேடி கல்வி தன்னார்வலர்கள் 30 பேர் தேர்வு செய்து பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இவர்கள் அந்தந்த பள்ளிக்கு சென்று ஆதார் பதிவினை மேற்கொள்ள உள்ளனர்.

இந்நிகழ்ச்சியில் கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன், கடலூர் மாநகராட்சி மேயர் சுந்தரி ராஜா, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் கா.பழனி ஆகியோர் கலந்து கொண்டனர்.

# திருநங்கைகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கிடும் ஒருநாள் சிறப்பு முகாம்

மதுரை, ஜூன் 11

சமூகத்தில் விளிம்பு நிலையில் உள்ள திருநங்கைகளுக்கு ஒரே இடத்தில் ஒரே நாளில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கிடும் பொருட்டு மதுரை மாவட்ட சமூக நலத்துறை மற்றும் இதர நலத்திட்ட சேவைகள் வழங்கும் துறைகளின் சார்பில் 21.06.2024 அன்று காலை 10 மணி முதல் மாவட்ட ஆட்சியரக வளாகத்திலுள்ள மக்கள் குறை தீர்க்கும் கூட்ட அரங்கில் திருநங்கைகளுக்கான ஒருநாள் சிறப்பு முகாம் நடைபெற உள்ளது.

இம்முகாமில் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த திருநங்கைகள், திருநங்கையர் அடையாள அட்டை, ஆதார் அட்டை, வாக்காளர் அட்டை, முதலமைச்சரின் மருத்துவ காப்பீட்டு திட்ட அட்டை மற்றும் ஆயுஷ்மான் பாரத் அட்டை ஆகிய நலத்திட்ட சேவைகளைப் பெற உரிய சான்றாவணங்களுடன் கலந்து கொண்டு பயன்பெறலாம்.

மேலும், இம்முகாம் தொடர்பான கூடுதல் தகவல்களைப் பெற மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடம் மூன்றாம் தளத்தில் இயங்கி வரும் மதுரை மாவட்ட சமூகநல அலுவலகத்தை தொடர்பு கொண்டு தகவலினை பெற்றுக் கொள்ளலாம் என்று மாவட்ட கலெக்டர் மா.செள.சங்கீதா, தெரிவித்தார்.

# இராமநாதபுரம் மாவட்டத்தில் கால்நடைகளுக்கான கோமாரி நோய் 5வது சுற்று தடுப்பூசி முகாம்: கலெக்டர் வேண்டுகோள்

இராமநாதபுரம், ஜூன் 11

இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் ஊராட்சி ஒன்றியம், ஆர்.காவனூர் ஊராட்சியில் கால்நடை பராமரிப்புத்துறையின் மூலம் தேசிய கால்நடை நோய் தடுப்பு திட்டத்தில் கோமாரி நோய் 5வது சுற்று தடுப்பூசி முகாம் துவக்க நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட கலெக்டர் பா.விஷ்ணு சந்திரன் தலைமையேற்று கால்நடைகளுக்கான தடுப்பூசி வழங்கும் முகாமை துவக்கி வைத்து தெரிவிக்கையில், கோமாரி எனப்படும் கால்காணை நோய் கால்நடைகளின் கால் குழம்பில் தாக்கும் வைரஸ் நோயாக இருந்து வருகிறது. இந்த வைரஸ் நோய் கால்நடைகளில் வாய் மற்றும் கால்களில் கொப்பளங்கள் ஏற்பட்டு கால்நடைகளை நோய் தாக்குதலுக்கு உட்படுத்துகின்றன. இந்த நோய் பாதிப்பால் கறவை மாடுகளில் பால் உற்பத்தி மிகவும் குறையும் நிலை ஏற்படும். இந்த வைரஸ் நோய் தாக்குதலை கோமாரி எனப்படும் கால்காணை நோய் என குறிப்பிடப்படுகின்றன.

இந்த கால்காணை நோயை ஒழித்திட மத்திய, மாநில அரசுகள் இணைந்து ஆறு மாதத்திற்கு ஒருமுறை என ஆண்டிற்கு இரண்டு முறை தடுப்பூசி முகாம் நடத்தப்படுகிறது. இராமநாதபுரம் மாவட்டத்தில் 71,000 கால்நடைகள் கண்டறியப்பட்டு அனைத்து கால்நடைகளுக்கும் தடுப்பூசி செலுத்திட திட்டமிட்டு 10.06.2024 இன்று முதல் 10.07.2024 வரை இந்த சிறப்பு தடுப்பூசி முகாம் நடைபெறுகிறது. இதில் 28 குழுக்கள் பணிமேற்கொள்ள உள்ளார்கள். ஒவ்வொரு குழுவும் நாள் ஒன்றுக்கு 150 கால்நடைகளுக்கு தடுப்பூசி செலுத்திடும். இந்த கொடிய கோமாரி கால்காணை நோயிலிருந்து கால்நடைகளை பாதுகாத்திட அனைத்து கால்நடை வளர்ப்பவர்களும் தங்கள் கால்நடைகளுக்கு தவறாமல் தடுப்பூசி செலுத்தி பாதுகாத்திட வேண்டுமென மாவட்ட கலெக்டர் தெரிவித்தார்.

பின்னர் 24 பயனாளிகளுக்கு கால்நடைகளுக்கான சத்து மாவு, பூச்சி மாத்திரை போன்ற உணவு தீவனங்களை மாவட்ட கலெக்டர் பா.விஷ்ணு சந்திரன் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் இராதாகிருஷ்ணன், துணை இயக்குநர் முகமது கான், உதவி இயக்குநர்கள் அரசு, ஜான் ரவிக்குமார், ஆர்.காவனூர் ஊராட்சி மன்றத்தலைவர் கமலா மற்றும் கால்நடை மருத்துவர்கள், ஆய்வாளர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# ஸ்காட் பொறியியல் கல்லூரியில் மாணவர் சேஃப்டி கிளப் சார்பில் உலகப் புகையிலை ஒழிப்பு விழிப்புணர்வு போட்டிகள்

நெல்லை, ஜூன் 11

திருநெல்வேலி ஸ்காட் பொறியியல் மற்றும் தொழில்நுட்ப கல்லூரியில் சேஃப்டி கிளப் சார்பில் உலகப் புகையிலை ஒழிப்பு விழிப்புணர்வு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசளிப்பு விழா நடைபெற்றது.




இதில் பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி, விழிப்புணர்வு பொன்மொழிகள் உள்ளிட்ட ஆறு வகையான புகையிலை ஒழிப்பு சம்பந்தப்பட்ட போட்டிகள் நடத்தப்பட்டன.

ஸ்காட் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியின் முதலாம் ஆண்டு எலக்ட்ரிக்கல் மற்றும் எலக்ட்ரானிக்ஸ் பட்டப்படிப்பு பயிலும் மாணவி பவித்ரா மற்றும் கம்ப்யூட்டர் சயின்ஸ் மாணவி இசாலினி ஆகியோர் வென்றனர். இரண்டாவது பரிசினை முதலாம் ஆண்டு கம்ப்யூட்டர் சயின்ஸ் பொறியியல் பட்டப்படிப்பு பயிலும் மாணவி இசை அபிநயா மற்றும் இரண்டாம் ஆண்டு கம்ப்யூட்டர் சயின்ஸ் மாணவி அபிநயா கூட்டாக வென்றனர்.

வெற்றி பெற்ற மாணவர்களுக்கு ஸ்காட் கல்வி குழுமத்தின் திறன் மேம்பாட்டு பயிற்சித் துறை மற்றும் வேலைவாய்ப்பு துறைகளின் இயக்குனர் முனைவர் சி.கே. ரவி சங்கர் ஸ்காட் வளாக பொது மேலாளர் திரு. ஆர். தம்பிதுரை மற்றும் கல்லூரி முதல்வர் முனைவர் ஜஸ்டின் திரவியம் ஆகியோர் பரிசுகளையும் பாராட்டு சான்றிதழ்களையும் வழங்கினர். பரிசளிப்பு விழாவில் அகாடமிக்ஸ் அதிகாரி முனைவர் சுந்தரராஜன், அட்மிஷன் அதிகாரி பேராசிரியர் வெங்கடசுப்பிரமணியன், ஆகியோர் பங்கேற்றனர். இப்போட்டிக்கான ஏற்பாடுகளை சேஃப்டி கிளப் பொறுப்பாளர்கள் திருமதி. ஜெயஸ்ரீ லெட்சுமி மற்றும் ஏஞ்சல் செல்வ பாக்கியம் சிறப்பாக செய்திருந்தனர்.

இப்போட்டியில் வெற்றி பெற்ற மாணவிகளை ஸ்காட் கல்விக் குழுமத் தலைவர் முனைவர் எஸ். கிளிட்டஸ் பாபு, துணைத் தலைவர் அமலி கிளிட்டஸ் பாபு, நிர்வாக இயக்குநர் அருண் பாபு, தாளாளர் பிரியதர்ஷினி அருண் பாபு, பொதுமேலாளர் (வளர்ச்சி) ஜெயக்குமார், பொதுமேலாளர் (நிர்வாகம்) கிருஷ்ணகுமார், மாணவர் சேர்க்கை இயக்குநர் ஜான் கென்னடி ஆகியோர் வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

# கோடை விடுமுறை முடிவடைந்து பள்ளிகள் திறக்கப்பட்டுள்ளதையடுத்து பூதிபுரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் மாவட்ட கலெக்டர் ஆய்வு

திண்டுக்கல், ஜூன் 11

கோடை விடுமுறை முடிவடைந்து பள்ளிகள் திறக்கப்பட்டுள்ளதையடுத்து திண்டுக்கல் மாவட்டம், பூதிபுரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் மாவட்ட கலெக்டர் மொ.நா.பூங்கொடி, நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.



பள்ளியில் எத்தனை மாணவ, மாணவிகள் உள்ளனர், புதிய மாணவர்கள் சேர்க்கை எத்தனை என்பது குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கேட்டறிந்தார். பள்ளி மாணவ, மாணவிகளுக்கு காலை உணவு வழங்கப்பட்டதை ஆய்வு செய்து, காலை உணவு குறித்து மாணவ, மாணவிகளிடம் கேட்டறிந்தார்.

பள்ளி வளாகத்தில் குப்பைகள் அகற்றப்பட்டு சுத்தமாக பராமரிக்கப்பட்டுள்ளதா, சுகாதாரமான பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளதா, வகுப்பறைகள் தூசு இல்லாமல் சுத்தமாக உள்ளதா, கழிவறைகள் சுகாதாரமாக பராமரிக்கப்படுகிறதா என்பதை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் கடந்த ஆண்டு குறைந்த நாட்களே விடுமுறை எடுத்த மாணவ, மாணவிகளுக்கு பரிசுகளை மாவட்ட கலெக்டர் பரிசுகள் வழங்கினார். மாவட்ட கலெக்டர், பள்ளி வளாகங்கள், கழிவறைகளை தொடர்ந்து சுத்தமாகவும், சுகாதாரமாகவும் பராமரிக்க வேண்டும், காலை உணவுத் திட்டத்தில் உணவுகளை மாணவ, மாணவிகளுக்கு தரமாக, சுகாதாரமானதாக தொடர்ந்து வழங்க வேண்டும் என்று ஆசிரியர்களுக்கு அறிவுறுத்தினார்.

# தேனி மாவட்டத்தில் பயிலும் பள்ளியிலேயே ஆதார் பதிவு என்ற சிறப்பு முகாம்: மாவட்ட கலெக்டர் தொடங்கி வைத்து பார்வை

தேனி, ஜூன் 11

தேனி மாவட்டம், பயிலும் பள்ளியிலேயே ஆதார் பதிவு மற்றும் ஆதார் திருத்தம் செய்வதற்காக நடைபெறும் சிறப்பு முகாமினை தேனி அல்லிநகரம் அரசு மேல்நிலைப்பள்ளியில் மாவட்ட கலெக்டர் ஆர்.வி. ஷஜீவனா தொடங்கி வைத்து பார்வையிட்டார்.



தமிழ்நாடு அரசின் சார்பில், மாணவர்களுக்கு அளிக்கப்படும் நலத்திட்டங்கள் அவர்களின் வங்கி கணக்கில் நேரடியாக அனுப்புவதற்கு ஆதார் எண் அவசியமாகிறது. பள்ளிக்கல்வித்துறையின் மூலம் மாணவ, மாணவிகளின் நலனுக்காக பல்வேறு புதுமையான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. குறிப்பாக, 1ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து நிலை மாணவர்களுக்கும் இடைநிற்றல் இன்றி தொடர்ந்து கல்வி பயில ஏதுவாக உதவித்தொகை மற்றும் ஊக்கத்தொகை வழங்கப்பட்டு வருகின்றன.

அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் உதவித்தொகை, ஊக்கத்தொகை போன்ற நலத்திட்டங்களை பெற ஆதார் அட்டை வைத்திருப்பது அவசியமாகிறது.

இந்த நலத்திட்டங்கள் எவ்வித சிரமமின்றி மாணவர்களுக்கு கிடைத்திட ஏதுவாக ஆதாரில் உள்ள திருத்தங்களை மேற்கொள்வதற்கும், புதிய ஆதாரை பதிவு செய்வதற்கும் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் மூலம் அனைத்து பள்ளிகளுக்கும் நேரடியாக சென்று பயிலும் பள்ளியிலேயே ஆதார் பதிவு என்ற முகாமை தமிழ்நாடு முழுவதும் இன்று தொடங்க தமிழ்நாடு முதலமைச்சர் உத்திரவிட்டுள்ளார்கள்.

தேனி மாவட்டம் முழுவதும் உள்ள 940 பள்ளிகளில் இம்முகாம் நடைபெற உள்ளது. ஒன்றியத்திற்கு ஒரு பள்ளி வீதம் ஒரு நாளைக்கு எட்டு பள்ளிகளில் விடுமுறை நாட்களை தவிர பிற நாட்களில் இம்முகாம் நடைபெறும்.

536 அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு இம்முகாம் இலவசமாக நடைபெறும். தனியார் பள்ளி மாணவர்களுக்கு இந்திய தனித்துவ அடையாள ஆணையம் நிர்ணயித்துள்ள குறைந்த கட்டணத்தில் இச்சிறப்பு முகாம் ஏற்படுத்தி தரப்பட்டுள்ளது.

அதன்படி, இன்றைய தினம் தேனி அல்லிநகரம் அரசு மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற இச்சிறப்பு முகாமினை மாவட்ட கலெக்டர் தொடங்கிந் வைத்து, கோடை விடுமுறை முடிந்து, பள்ளிக்கு வருகை தந்துள்ள அனைத்து மாணவர்களுக்கும் வாழ்த்துக்களையும், கல்வி பயில்வதால் மட்டுமே வாழ்வில் முன்னேற முடியும், எனவே மாணவர்கள் நன்றாக கல்வி பயில வேண்டும் என மாணவர்களை வாழ்த்தி பாராட்டினார்.

இந்நிகழ்வில் தேனி அல்லிநகரம் நகர்மன்ற தலைவர் ரேணுபிரியா பாலமுருகன், மாவட்ட முதன்மை கல்விஅலுவலர் இந்திராணி, முதன்மை கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர் பெருமாள், ஆசிரியர் பயிற்சி ஒருங்கிணைப்பாளர்கள் டேவிட், கஜேந்திரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாடு அரசு பணியாளர்கள் தேர்வாணையம் நடத்திய தொகுதி 4 தேர்வு நடைபெற்ற மையம்: மாவட்ட கலெக்டர் பார்வையிட்டு ஆய்வு

சிவகங்கை, ஜூன் 11

தமிழ்நாடு அரசு பணியாளர்கள் தேர்வாணையம் சார்பில், நடைபெற்ற தொகுதி 4 தேர்விற்கான, சிவகங்கை மன்னர் துரைசிங்கம் அரசு கலைக்கல்லூரி தேர்வு மையத்தில், மாவட்ட கலெக்டர் ஆஷா அஜித் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில்,



தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தொகுதி4க்கான தேர்வானது நடைபெற்றது.

சிவகங்கை வட்டத்தில் 28 மையங்களில் தேர்வு எழுத 8,355 நபர்களுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டதில் 6735 (கி81%) தேர்வாளர்கள் தேர்வில் பங்கேற்றனர். 1,620 நபர்கள் தேர்வில் கலந்து கொள்ளவில்லை. தேவகோட்டை வட்டத்தில் 11 மையங்களில் தேர்வு எழுத 3,672 நபர்களுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டதில் 2,837 (77%) தேர்வாளர்கள் தேர்வில் பங்கேற்றனர். 835 நபர்கள் தேர்வில் கலந்து கொள்ளவில்லை. இளையான்குடி வட்டத்தில் 8 மையங்களில் தேர்வு எழுதிட 2,319 நபர்களுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டதில் 1,842 (79%) தேர்வாளர்கள் தேர்வில் பங்கேற்றனர். 477 நபர்கள் தேர்வில் கலந்து கொள்ளவில்லை. காளையார்கோவில் வட்டத்தில் 13 மையங்களில் தேர்வு எழுதிட 3,111 அழைப்பாணை அனுப்பப்பட்டதில் 2,441 (78%) தேர்வாளர்கள் தேர்வில் பங்கேற்றனர். 670நபர்கள் தேர்வில் கலந்து கொள்ளவில்லை. காரைக்குடி வட்டத்தில் 32 மையங்களில் தேர்வு எழுதிட 9,572 நபர்களுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டதில் 7,052 (74%ம) தேர்வாளர்கள் தேர்வில் பங்கேற்றனர். 2,520 நபர்கள் தேர்வில் கலந்து கொள்ளவில்லை. மானாமதுரை வட்டத்தில் 23 மையங்களில் தேர்வு எழுதிட 4,399 நபர்களுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டதில் 3,538 (80%) தேர்வாளர்கள் தேர்வில் பங்கேற்றனர். 861 நபர்கள் தேர்வில் கலந்து கொள்ளவில்லை.

சிங்கம்புணரி வட்டத்தில் 6 மையங்களில் தேர்வு எழுதிட 1,647 நபர்களுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டதில் 1,320 (80%) தேர்வாளர்கள் தேர்வில் பங்கேற்றனர். 327 நபர்கள் தேர்வில் கலந்து கொள்ளவில்லை. திருப்புவனம் வட்டத்தில் 15 மையங்களில் தேர்வு எழுதிட 4,024 நபர்களுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டதில் 3,307 (82%) தேர்வாளர்கள் தேர்வில் பங்கேற்றனர். 717 நபர்கள் தேர்வில் கலந்து கொள்ளவில்லை.

திருப்பத்தூர் வட்டத்தில் 8 மையங்களில் தேர்வு எழுதிட 2,144 நபர்களுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டதில் 1,672 (78%) தேர்வாளர்கள் தேர்வில் பங்கேற்றனர். 472 நபர்கள் தேர்வில் கலந்து கொள்ளவில்லை.

சிவகங்கை மாவட்டத்தில் உள்ள 9 வட்டங்களில் 144 தேர்வு மையங்கள், பள்ளி மற்றும் கல்லூரிகளில் அமைக்கப்பட்டிருந்தன. தேர்விற்கு விண்ணப்பித்திருந்த 39,243 தேர்வாளர்களுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டதில் 30,744 (78%) தேர்வாளர்கள் தேர்வில் கலந்து கொண்டனர். 8499 நபர்கள் தேர்வில் கலந்து கொள்ளவில்லை.

அனைத்துத் தேர்வு மையங்களிலும் தேர்வாளர்கள் தேர்வு மையத்திற்கு வந்து செல்ல தேவையான போக்குவரத்து வசதிகள், தடையில்லா மின்வசதி, காற்றோட்டமான தேர்வு அறை, குடிநீர் வசதி, கழிப்பிட வசதி மேற்கொள்ளப்பட்டு இருந்தது.

ஒளிவுமறைவற்ற முறையில் எந்தவித புகார்களுக்கும் இடமளிக்காத வகையில் நேர்மையான முறையில் தேர்வு நடைபெற்றது என மாவட்ட கலெக்டர் ஆஷா அஜித் தெரிவித்தார்.

ஆய்வின்போது, சிவகங்கை வட்டாட்சியர் சிவராமன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# உல்லாடா சமுதாய கூடப்பகுதியில் கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் கால்நடைகளுக்கு ஐந்தாம் சுற்று கோமாரி நோய் தடுப்புசி போடும் பணிகள்

ஊட்டி, ஜூன் 11

நீலகிரி மாவட்டம், கேத்தி பேரூராட்சி, உல்லாடா சமுதாய கூடப் பகுதியில் கால்நடைபராமரிப்புத் துறையின் சார்பில் (யுனூஊ) கால்நடைகளுக்கு ஐந்தாம் சுற்று கோமாரி நோய் தடுப்புசி போடும் பணிகளை மாவட்ட கலெக்டர் மு.அருணா தொடங்கிவைத்தார்.



கால்நடை வளர்ப்பின் மூலம் கால்நடைகளில் இருந்து கிடைக்கும் பால், மனிதர்களின் உணவில் ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது. கால்நடைகளிலிருந்து பெறப்படும் பால், மாமிசம், தோல், உரோமம் மற்றும் பிற உபபொருட்களின் மூலம் நாட்டிற்கு பெரும் பொருளாதாரத்தை ஈட்டிக் கொடுப்பதால் நாட்டின் பொருளாதாரத்தில் கால்நடை வளர்ப்பு பெரும் பங்கு வகிக்கிறது. எனவே, கால்நடைகளை நோயின்றி பேணிக்காப்பது கால்நடை வளர்ப்போரின் முக்கிய கடமையாகும். மேலும், மாடுகளில் ஏற்படும் வியாதிகளில் மிகக்கொடிய, பெரும் அளவில் கால்நடைகளை தாக்கும் நோய் கோமாரி நோய் என்பது குறிப்பிடத்தக்கது. நீலகிரி மாவட்டத்தில், உள்ள சுமார் 28,200 பசு மற்றும் எருமையினங்களை அந்நோயிலிருந்து காக்கும் வண்ணம் கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் யுனூஊ ஐந்தாம் சுற்று கோமாரி நோய் தடுப்புசி கால்நடைகளுக்குப் (மாட்டினம் (ம) எருமையினம்) போடும் பணி தொடங்கப்பட்டது. இப்பணிக்காக ஒரு கால்நடை உதவி மருத்துவர், ஒரு கால்நடை ஆய்வாளர் மற்றும் ஒரு கால்நடை பராமரிப்பு உதவியாளர்களை கொண்டு 29 தடுப்புசி குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், விவசாயிகளுக்கு தங்களது கிராமத்தில், எந்த நாளில் தடுப்புசி பணி நடைபெறும் என்ற விவரத்தினை முன்கூட்டியே சம்மந்தப்பட்ட கால்நடை மருந்தகத்தால் அக்கிராமத்திற்கு தெரிவிக்கப்படும் அல்லது பொதுமக்கள் தங்கள் பகுதி கால்நடை மருத்துவமனை, கால்நடை மருந்தகம் அல்லது கால்நடை கிளை நிலையங்களை தொடர்பு கொண்டு தெரிந்துக்கொள்ளலாம். கோமாரி நோய் தடுப்புசி போடும் நாளில் விவசாயிகள் தங்களது கால்நடைகளுக்குத் தவறாது தடுப்புசி போட்டுக்கொள்ள வேண்டும் என கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தஞ்சாவூர் ஒன்றியம் திருமலைசமுத்திரம் ஊராட்சியில் கால்நடைப் பராமரிப்பு துறை சார்பில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி பணிகள்

தஞ்சாவூர், ஜூன் 11

தமிழ்நாடு முதலமைச்சர் ஆணையின்படி கோமாரி நோய் தடுப்பு முகாமில் ஏராளமான கால்நடைகளுக்கு தடுப்பூசி அளிக்கப்பட்டது.

பின்னர் மாவட்ட கலெ க்டர் தெரிவித்ததாவது.

கால்நடைகளில் ஏற்படும் கோமாரி நோய் ஒருவகை வைரஸ் நச்சு கிருமியால் ஏற்படும் கொடிய நோயாகும். இந்த வகை நோய்க்கு சிகிச்சை கிடையாது. தடுப்பூசி மட்டுமே ஒரே மருந்தாகும். இந்த நோய் பாதிப்பு ஏற்படின் கறவை மாடுகளில் பால் உற்பத்தி குறைவதுடன் சினைப்பிடிப்பதில் தாமதம் ஏற்படும். மேலும் இளைப்பு ஏற்படுவதால் எருதுகளில் வேலைத்திறன் குறைகிறது.

இத்தடுப்பூசிப் பணிக் கான உத்தேச செயல்திட்ட (அட்டவணை) ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ளது. உத்தேச செயல்திட்டங்கள் அனைத்து ஊராட்சி மன்றத்தலைவர் அவர் களுக்கு தெரிவிக்கப்படும். உத்தேச செயல்திட்டம் தடுப்பூசி அளிக்கப்படும் இடம், ( குக்கிராம வாரி யாக ) நாள், நேரம் ஆகியவை இடம் பெற்று இருக்கும். இத்தடுப்பூசி பணி அனைத்து மக்களை சென்றடையும் வகையில் அனைத்து ஊராட்சி மன்றத்தலைவர் அனைவரும் தங்களது ஊராட்சிக்குட்பட்ட பகுதியில் ஒலிபெருக்கி விளம்பரம் மற்றும் விளம்பர நோட்டீஸ் வாயிலாக கோமாரி நோயினை பற்றியும், தடுப்பூசியின் முக்கியத்துவம் பற்றியும் விளக்கமளிக்க கேட்டுக்கொள்கிறோம் என மாவட்ட கலெக்டர் தீபக் ஜேக்கப் தெரிவித்தார்.

# புதிய புரட்சிக் கழகம் கட்சி தொடக்கம்

செங்கல்பட்டு, ஜுன்.11

செங்கல்பட்டு மாவட்டம், அச்சிறுப்பாக்கம் பேரூராட்சிக்குட்பட்ட மலை நகர் பகுதியில் உள்ள தாத்தா ரெட்டைமலை சீனிவாசன் மணி மண்டபத்தில் ஓ.இ.சங்கர், புதிய புரட்சிக் கழகம் என்ற கட்சியை தொடங்கினார்.

புதிய கட்சி தொடங்கிய கட்சியின் நிறுவனத் தலைவர் டாக்டர் ஓ.இ.சங்கருக்கு விடுதலை சிறுத்தை கட்சியின் மண்டல செயலாளர் சூ.க. ஆதவன், மாவட்ட செயலாளர் தமிழினி ஆகியோர் வாழ்த்து தெரிவித்தனர். இதனைத் தொடர்ந்து புதிய புரட்சி கழகம் கட்சி கொடியை கோவூர் த.கணேசன், அறிமுகம் செய்து வைத்தவர். மேலும் புதிய புரட்சிக் கழகம் என்ற கட்சியை தொடங்கியுள்ள ஓ.இ.சங்கர், புரட்சி பாரதம் கட்சியின் செங்கல்பட்டு தெற்கு




மாவட்ட தலைவராக பொறுப்பில் இருந்தவர். புரட்சி பாரதம் கட்சியை விட்டு விலகி வந்து தனது ஆதரவாளர்களுடன் புதிய புரட்சி கழகம் என்ற கட்சியை தொடங்கியுள்ளார். இந்த கட்சியின் தொடக்க விழாவில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்

# நடிகனாகும் முன்.. துபாய் வாழ்க்கை நினைவுகளை பகிர்ந்த விஜய் சேதுபதி



விஜய் சேதுபதியின் நடிப்பில் உருவாகி உள்ள 50வது திரைப்படம் 'மகாராஜா'. இந்த படத்தை 'குரங்கு பொம்மை' படத்தை இயக்கிய நிதிலன் சாமிநாதன் இயக்கி உள்ளார். இந்த படத்தில் அனுராக் காஷ்யப், மம்தா மோகன்தாஸ், நட்டி, முனிஷ்காந்த், சிங்கம் புலி, பாரதிராஜா, வினோத் சாகர், பி.எல்.தேனப்பன் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.

இந்நிலையில், இப்படத்தின் புரொமோசன் பணியின்போது பேசிய விஜய் சேதுபதி நடிகனாகும் முன் துபாயில் இருந்த நினைவுகளை பகிர்ந்தார். அது குறித்து அவர் பேசியதாவது,

'இது நான் சொல்லி சொல்லி சலிச்சுப் போன கதையாக இருந்தாலும், கேட்பதற்கு சுவாரஸ்யமாக இருக்கும். நான் ஒரு கம்பெனியில் 3,500 ரூபாய் சம்பளத்தில் அக்கவுண்டன்டாக வேலை செய்து கொண்டு இருந்தேன். அப்போது துபாயில் வேலை இருப்பதாகவும், மாதம் ரூ.12 ஆயிரம் சம்பளம் தருவார்கள் என்றும் என் நண்பர் ஒருவர் கூறினார்.

என்னிடம் அப்போது பாஸ்போர்ட் கிடையாது. பாஸ்போர்ட் அப்ளை பண்ணினேன். 10 நாட்களில் செல்ல வேண்டும் என்று சொன்னார்கள். இதனால், ஏரியா கவுன்சிலரை பார்க்க வேண்டும், காசு கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். என்கிட்ட சுத்தமா காசு கிடையாது. அப்போது நானே என்னோட டிகிரி சான்றிதழ், ரேஷன் கார்டு, கான்டக்ட் சான்றிதழ் எடுத்துகொண்டு நேராக கமிஷனர் ஆபிஸ் போனேன்.

அங்க ஒரு நல்ல மனுஷன் இருந்தாரு. அவர்கிட்ட இவற்றையெல்லாம் காட்டி, "சார் குடும்ப சூழல் காரணமாக வேலைக்கு போகிறேன், எனக்கு இந்த மாதிரி கேட்கிறார்கள், சீக்கிரம் வேண்டும் சார்" என்று கூறினேன். அங்க நிறைய பாஸ்போர்ட் அப்ளிகேஷன் வந்திருந்தது. நல்ல நேரம் அவர், அதுல என்னோட பாஸ்போர்ட் அப்ளிகேஷன் எடுத்துட்டு, அடுத்த நாள் எங்க ஏரியா போலீஸ் ஸ்டேஷன் போக சொன்னாரு.

போலீஸ் ஸ்டேஷன் போனப்போ அங்க எங்கிட்ட, உங்களுக்கு கமிஷனர் ஆபிசில் ஆள் தெரியுமா என்று கேட்டாங்க. எனக்கு யாரையும் தெரியாது. ஆனா எனக்காக அவர் கால் பண்ணி சொல்லிருக்காரு. பாஸ்போர்ட் கிடைத்தது. நான் வாங்கிட்டு ஊருக்கு போனேன். ஒரு கவர் கொடுத்தாங்க. ஒரு தாத்தா வந்து கூட்டிட்டு போவாருனு சொன்னாங்க. அவருக்கு 75 வயசு எனக்கு 21 வயசு.

அவர் வந்து என்னை கூட்டிட்டு போனாரு. வந்தா பாலைவனத்துல மழை பெய்யுது. நம்ம துபாய்ல பெரிய ஆளாக போறோம்னு நினைச்சு கனவுகளோட நான் போனேன். அப்புறம் என்னோட ஆபிசுக்கு சென்று முதலாளியை பார்த்தேன். நான் சம்பாதிச்ச பணம் குடும்ப சூழ்நிலைக்கு ஓரளவு வசதியா இருந்தது. ஆனால் நான் நினைத்த அளவுக்கு வாழ்க்கை மாறவில்லை.

20 வயசுல ஏதாவது சாதிக்க மாட்டோமா, குடும்பத்தை எப்படியாவது மேல கொண்டு வந்துவிட மாட்டோமா என்று ஒரு கனவு இருக்கும். எதையாவது பண்ண மாட்டாமோன்னு ஏங்கிருக்கேன். அங்க கொண்டாட்டம் எல்லாம் கிடையாது. வியாழக்கிழமை என்றால் எல்லாரும் ஒன்றாக சேர்ந்து பிரியாணி சமைத்து சாப்பிட்டுவிட்டு, துணி எல்லாம் துவைச்சு காயப்போடுவோம்.

ரூம் சுத்தம் செய்வது, சமைப்பது, பாத்ரூம் கழுவுவது இவ்வளவுதான் வாழ்க்கை. இதை தாண்டி கனவு காண கூட நேரம் இருக்காது. இப்போ 10 வருஷம் கழிச்சு திரும்பி அந்த இடத்தை பார்க்கும்போது, நான் அங்க ஏக்கத்தோட சுத்தின, அந்த ஞாபகங்கள்தான் எனக்கு வந்ததே தவிர, மற்ற எதுவும் எனக்கு தெரியவே இல்ல'. இவ்வாறு கூறினார்.

# திருமணத்துக்கு பிறகும் கவர்ச்சியில் கலக்கும் ரகுல்பிரீத் சிங்



தமிழில் 'தீரன் அதிகாரம் ஒன்று' படத்தில்நாயகியாகநடித்துபிரபலமான ரகுல் பிரீத் சிங், அதனைத்தொடர்ந்து 'தேவ்', 'என்.ஜி.கே.', 'அயலான்' ஆகிய படங்களிலும் நடித்து இருக்கிறார். தற்போது கமல்ஹாசனின் 'இந்தியன்2' படத்தில் நடித்துள்ளார்.

ரகுல் பிரீத் சிங், இந்தி நடிகர் ஜாக்கி பக்னானியை காதலித்து திருமணம் செய்துகொண்டார். இவர்களது திருமணம் கடந்த பிப்ரவரி மாதம் கோவாவில் நடந்தது.

நயன்தாரா, காஜல் அகர்வால், ஹன்சிகா, நிக்கி கல்ராணி வரிசையில் திருமணத்துக்கு பிறகும் படங்களில் மும்முரமாக நடிக்க ரகுல் பிரீத் சிங் முடிவு செய்துள்ளார். குறிப்பாக இந்தி சினிமாவில் ஆதிக்கம் செலுத்த அவர் ஆர்வமாக இருக்கிறாராம்.

இதற்காக அடிக்கடி போட்டோசூட் நடத்தி தனது கவர்ச்சி புகைப்படங்களை இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வெளியிட்டு வருகிறார். இந்த புகைப்படங்களை பார்த்த ரசிகர்கள் ரகுல் பிரீத் சிங்கின் அழகை புகழ்ந்து தள்ளுகிறார்கள்.

தற்போது 'மேரி பத்னி கா', 'டி டி பியார் டி2' ஆகிய இந்தி படங்களில் நடித்து கொண்டிருக்கும் ரகுல் பிரீத் சிங், தமிழ் சினிமாவில் நடிக்கவும் கதைகள் கேட்டு வருகிறாராம். சினிமா தாண்டி ஓட்டல் தொழிலில் ஈடுபடவும் ரகுல் பிரீத் சிங் முனைப்பு காட்டி வருவது குறிப்பிடத்தக்கது.

# எஸ்.கே.23 வில்லனை வீடியோ வெளியிட்டு அறிவித்த படக்குழு



தமிழ் திரையுலகின் தற்போதைய வசூல் நாயகனாக விளங்கும் சிவகார்த்திகேயன், 'மெரினா' படத்தின் மூலம் அறிமுகமானார். தொடர்ந்து, பல வெற்றிப் படங்களைக் கொடுத்து தமிழ் சினிமாவில் தவிர்க்க முடியாத கதாநாயகன் என்கிற நிலைக்கு உயர்ந்துள்ளார்.

தற்போது, அமரன் படத்தில் நடித்து முடித்துள்ளார். மேலும், இயக்குனர் ஏ.ஆர். முருகதாஸ் இயக்கத்தில் நடித்து வருகிறார். இப்படத்தின் சண்டைக்காட்சிகள் சென்னையில் படமாக்கப்பட்டு வருகின்றன. சமீபத்தில் இப்படத்தில் சிவகார்த்திகேயனுக்கு வில்லனாக நடிகர் சஞ்சய் தத் நடிப்பதாக தகவல் வெளியானது.

இந்த நிலையில், இப்படத்தில் சிவகார்த்திகேயனுக்கு வில்லனாக வித்யூத் ஜமால் நடிப்பதாக படக்குழு அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது. இது குறித்து வீடியோ ஒன்றையும் படக்குழு வெளியிட்டுள்ளது. தற்போது இந்த வீடியோ இணையத்தில் வைரலாகி வருகிறது.

எஸ்.கே.23 திரைப்படத்தை இயக்கி முடித்த கையோடு பாலிவுட்டுக்குசெல்லஉள்ளஇயக்குனர்ஏ.ஆர்.முருகதாஸ், அங்கு சல்மான் கானை வைத்து சிக்கந்தர் என்கிற திரைப்படத்தை இயக்க உள்ளார். அதில் ராஷ்மிகா மந்தனா, கரீனா கபூர் ஆகியோர் ஹீரோயின்களாக நடிக்க, சத்யராஜ் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்க உள்ளார்.

# 'காஞ்சனா 4'ல் மிருணாள் தாகூர் ? ராகவா லாரன்சின் பதிவு வைரல்





ராகவா லாரன்ஸ் நடித்து இயக்கிய 'காஞ்சனா' திரைப்படம் கடந்த 2011ம் ஆண்டு வெளியாகி ரசிகர்களிடையே வரவேற்பை பெற்றது. இதன் தொடர்ச்சியாக 2015ல் 'காஞ்சனா 2' மற்றும் 2019ல் 'காஞ்சனா 3' என அடுத்தடுத்த பாகங்களை ராகவா லாரன்ஸ் இயக்கினார். ஹாரர் காமெடி ஜானரில் உருவான இந்த படங்கள் பேமிலி ஆடியன்சை கவர்ந்தன.

தற்போது, 'காஞ்சனா 4' படத்தை இயக்குவதில் ராகவா லாரன்ஸ் கவனம் செலுத்தி வருகிறார். செப்டம்பர் மாதம் 'காஞ்சனா 4' படத்தின் படப்பிடிப்பு தொடங்கும் என்றும் தகவல் வெளியாகி உள்ளது. இதனிடையே இப்படத்தில், மிருணாள் தாகூர் நடிக்க உள்ளதாக இணையத்தில் தகவல் பரவி வந்தது. இதற்கு ராகவா லாரன்ஸ் மறுப்பு தெரிவித்து தனது எக்ஸ் பக்கத்தில் பதிவு ஒன்றை பகிர்ந்துள்ளார். அதில்,

'நண்பர்களுக்கும் ரசிகர்களுக்கும் வணக்கம், காஞ்சனா 4 படத்தில் நடிக்க இருக்கும் நடிகர், நடிகைகள் குறித்து சமூக வலைதளங்களில் பரவி வரும் தகவல்கள் அனைத்தும் வதந்திகள். விரைவில் அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியாகும்,' இவ்வாறு தெரிவித்துள்ளார். தற்போது இந்த பதிவு இணையத்தில் வைரலாகி வருகிறது.

# அவரிடம் உள்ள அனுபவத்தை எதுவும் முறியடிக்க முடியாது: இந்திய வீரரை பாராட்டிய ரோகித் சர்மா



9வது டி20 உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி அமெரிக்கா மற்றும் வெஸ்ட் இண்டீசில் நடந்து வருகிறது. இதில் பங்கேற்றுள்ள 20 அணிகள் 4 பிரிவாக பிரிக்கப்பட்டு தங்களுக்குள் தலா ஒரு முறை மோதுகின்றன. லீக் முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் டாப்2 இடங்களை பிடிக்கும் அணிகள் சூப்பர் 8 சுற்றுக்கு முன்னேறும். இந்த தொடருக்கான இந்திய அணி ரோகித் சர்மா தலைமையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தொடரில் இந்திய அணி தனது முதல் லீக் ஆட்டத்தில் அயர்லாந்தை வென்றிருந்தது. இந்நிலையில் இந்திய அணி தனது 2வது லீக் ஆட்டத்தில் இன்று பாகிஸ்தானை சந்திக்கிறது. பாகிஸ்தான் அணி தனது முதல் லீக் ஆட்டத்தில் அமெரிக்காவிடம் தோல்வி கண்டிருந்தது.

இந்நிலையில் இன்று நடைபெறும் பாகிஸ்தானுக்கு எதிரான ஆட்டத்திற்கு முன் நடைபெற்ற பத்திரிகையாளர்கள் சந்திப்பில் இந்திய கேப்டன் ரோகித் சர்மா ஒரு அணியாக அனைவரும் சிறப்பாக பங்காற்ற வேண்டும் என்று தான் நினைப்பதாக தெரிவித்தார். இது பற்றி அவர் கூறியதாவது,

போட்டியில் வெற்றி பெற ஒன்றிரண்டு வீரர்களை மட்டும் சார்ந்திருக்க வேண்டாம் என்று நினைக்கிறேன். ஒரு அணியாக நான் உள்பட 11 பேரும் பங்காற்ற வேண்டும். அணியில் முக்கிய வீரர்கள் இடம்பெற்றுள்ளனர். அவர்கள் போட்டியில் முக்கிய பங்காற்ற போகின்றார்கள். ஆனாலும், அனைவரும் அவர்களால் முடிந்த பங்களிப்பை வழங்க வேண்டும்.

வங்காளதேசம் அணிக்கு எதிரான பயிற்சி ஆட்டத்தில் விராட் கோலி விளையாடவில்லை. ஆனால் இந்த போட்டிக்கு முன்பு அவர் போதுமான பயிற்சியை எடுத்துக் கொண்டுள்ளார். உலகின் பல்வேறு பகுதிகளிலும், மிக முக்கிய தொடர்களில் விளையாடிய அனுபவம் கொண்டவர் விராட். அந்த அனுபவத்தை எதுவும் முறியடிக்க முடியாது. இவ்வாறு அவர் கூறினார்.

# புரோ ஆக்கி லீக்: இந்திய பெண்கள் அணிக்கு ஏமாற்றம்



9 அணிகள் பங்கேற்றுள்ள 5வது புரோ ஆக்கி லீக் தொடர் பல்வேறு நகரங்களில் நடந்து வருகிறது. இதில் பெண்கள் பிரிவில் நேற்று நடந்த ஒரு ஆட்டத்தில் இந்தியா 23 என்ற கோல் கணக்கில் இங்கிலாந்திடம் தோல்வி அடைந்தது.

ஒரு கட்டத்தில் இந்தியா 21 என்ற கணக்கில் முன்னிலை வகித்த நிலையில், கடைசி 4 நிமிடங்களில் இங்கிலாந்தின் கிரேஸ் பால்ட்சன் பெனால்டி கார்னர் வாய்ப்பை பயன்படுத்தி அடுத்தடுத்து கோல் போட்டு தங்கள் அணிக்கு வெற்றியை தேடித்தந்தார்.

இந்திய அணி தொடர்ச்சியாக சந்தித்த 8வது தோல்வி இதுவாகும். தனது கடைசி லீக்கை முடித்து விட்ட இந்தியா மொத்தத்தில் 3 வெற்றி, 13 தோல்வி என 8 புள்ளிகளுடன் 8வது இடத்துக்கு தள்ளப்பட்டு ஏமாற்றம் அளித்தது.


# இந்திய கால்பந்து அணியின் கேப்டனாக குர்பிரீத் செயல்படுவார் பயிற்சியாளர் அறிவிப்பு



2026ம் ஆண்டு உலகக் கோப்பை கால்பந்து போட்டிக்கான ஆசிய மண்டல தகுதி சுற்றின் 2வது ரவுண்டில் இந்திய அணி 'ஏ' பிரிவில் இடம் பிடித்துள்ளது. கட்டாயம் வென்றாக வேண்டிய நெருக்கடியுடன் இந்திய அணி தனது கடைசி லீக்கில் கத்தார் அணியை, அல்ரேயானில் நாளை சந்திக்கிறது.

குவைத்துக்கு எதிரான கடந்த ஆட்டத்துடன் இந்திய அணியின் கேப்டன் சுனில் சேத்ரி ஓய்வு பெற்று விட்டதால் புதிய கேப்டனாக கோல் கீப்பர் குர்பிரீத் சிங் சந்து நியமிக்கப்பட்டுள்ளார். 32 வயதான குர்பிரீத் சிங் இதுவரை 71 ஆட்டங்களில் விளையாடி உள்ளார்.

கடந்த 5 ஆண்டுகளில் சுனில் சேத்ரி, சந்தேஷ் ஜின்கான் ஆகியோருடன் குர்பிரீத் சிங்கும் எங்களது கேப்டன்ஷிப் குழுவில் ஒருவராக இருந்தார். எனவே தற்போதைய சூழலில் அவர் அணியின் பொறுப்பை ஏற்கிறார்' என்று இந்திய பயிற்சியாளர் ஸ்டிமாக் தெரிவித்தார்.



**இலமென்று வெஃகுதல் செய்யார் புலம்வென்ற புன்மையில் காட்சி யவர்**

**விளக்கம்:**

**ஐம்புலன்களையும் வென்ற குற்றமில்லாத அறிவை உடையவர், யாம் வறுமை அடைந்தோம் என்று எண்ணியும் பிறர் பொருளை விரும்பார்.**

# பிரெஞ்சு ஓபன் டென்னிஸ்: ஸ்பெயின் வீரர் அல்காரஸ் சாம்பியன்



முன்னணி வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்ட பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் தொடர் பிரான்ஸ் தலைநகர் பாரீசில் நடைபெற்றது. இதில், ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று நடந்த இறுதிப் போட்டியில் ஜெர்மனி வீரர் அலெக்சாண்டர் ஸ்வெரேவ் , ஸ்பெயின் வீரர் கார்லஸ் அல்காரஸ் ஆகியோர் மோதினர்.

விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் இரு வீரர்களும் சிறப்பாக விளையாடினர். இருப்பினும் கடைசி இரு செட்களிலும் கார்லஸ் அல்காரஸ் ஆதிக்கம் செலுத்தினார். இதனால் 63, 26, 57, 61, 62 என்ற செட் கணக்கில் அல்காரஸ் வெற்றி பெற்று சாம்பியன் பட்டம் வென்றார்..

**நமது தினகனி**
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
www.dhinakani.com
Canara Bank Account : 120028528266
IFSC code : CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.